யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்

# 12 நாடுகளின் பிரதிநிதிகள் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)
12 கைத்தொழில் நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகிறது.

விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளுடன் இவர்கள் முதலில் பேச்சுவார்த்தை நடத்துவர். இக்குழுவினருக்கும்-விடு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 23 இதழ் 25
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை [7-3-1995]

## சமாதான நடவடிக்கை முன்னேற்றமடைகிறது

### - அனுருத்த ரத்வத்த

(கொழும்பு)
சமாதான நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னேறி வருகின்றன. பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல்

அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவசரகால நிலை தொடர்

(2ம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்துக்கு ரத்வத்த விஜயம்

(கொழும்பு)
பாதுகாப்பு பிரதிஅமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து இராணுவ முகாமகளுக்கும்

சென்று பாதுகாப்பு நிலைமைகளைப் பார்வையிட்டு வருகின்றார்
அமைச்சரும் அவரது குழுவினரும் நேற்று வவுனியாவுக

(4ம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்னைத் தீர்வுக்கு சர்வதேச மத்தியஸ்தத்தை புலிகள் என்றும் நிராகரிக்கவில்லை

## சந்திரிகாவின் பி. பி. ஸி. பேட்டிக்கு அன்ரன் பாலசிங்கம் பதில்

[யாழ்ப்பாணம்]
இனப்பிரச்னைத்தீர்வுக்கு சர்வதேசம் மத்தியஸ்தம் வகிப்பதை விடுதலைப்புலிகள் எப்போதும் நிராகரித்தது கிடையாது. ஆனால் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் மத்தியஸ்தம் வகிக்க வருவதையே விடுதலைப் புலிகள் விரும்பவில்லை''

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலை படைத் தளத்தில் படை அதிகாரிகளை சந்திரிகா சந்திப்பு

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திருகோணமலை படைத்தளத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

அங்கு அவர் படை உயரதிகாரிகளைச் சந்தித்து கூட்டம் ஒன்றையும் நடத்தினார்

இதேவேளையில் ஜனாதிபதி சந்திரிகா இம்மாத இறுதிக்குள் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றையும் மேற்கொள்ள

(4ம் பக்கம் பார்க்க)

## பேச்சு முறிந்தால் புலிகள் சர்வதேச உதவியை நாடுவர்

(யாழ்ப்பாணம்)
''அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்குமிடையில் தற்போது நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முறிவு ஏற்பட்டால் விடுதலைப் புலிகள் சர்வதேச மத்தியஸ்தத்தையே நாடுவார்கள்''

இவ்வாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் கூறினார். அவர் இதுபற்றி மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

அரசப் பிரதிநிதிகளுக்கும்-எமது பிரதிநிதிகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதையே நாம்கூடுதலாக விரும்புகின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகா, எமது தலைவருக்குஎழுதியகடிதத்தை

( 4-ம் பக்கம் பார்க்க)

## யூனிசெவ் குழு இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)
யூனிசெவ் நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அவசரத்திட்ட அதிகாரி திருமதி சரோயா விஜேசேகர, அவசரத்திட்டஉதவி அதிகாரி ஐ. ஜே.கே. ஹமீத் ஆகிய இருவருமே இன்று இங்கு வருகின்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)
கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி முதல் இரவு 8-00 மணி வரை இருபக்க சேவையாக நடைபெறும என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## நான்காம் கட்ட பேச்சு பற்றி அரசு தரப்பில் மௌனம்

[யாழ்ப்பாணம்]
நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை பற்றி அரசு இன்னும் திகதி ஏதும் குறிப்பிடாமல் மௌனமாகவே இருக்கிறது. ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தலைவர் திரு. பிரபாகரன் எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதியை நிர்ணயிக்கும்படி, வலியுறுத்திய வண்ணமே இருக்கின்றார்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் நடத்திய பத்திரிகையாளர்

(4ம் பக்கம் பார்க்க)

## இரமேஸ்வரத்திலிருந்து 500 இல. தமிழ் அகதிகள் நேற்று புறப்பட்டனர்

(சென்னை)
500 பேரைக்கொண்ட இலங்கை தமிழ் அகதிகள் குழு ஒன்று இராமேஸ்வரத்திலிருந்து நேற்று தலைமன்னாருக்கு புறப்பட்டது.

கடந்த 27-ம் திகதியிலிருந்து இடவரையில் 2000 அகதிகள் இலங்கை திரும்பிச் சென்றுள்ளனர்.

இம்மாத நடுப்பகுதிக்குள் மேலும் இரண்டாயிரம் அகதிகள் இலங்கை திரும்பவுள்ளனர். (க - இ)

## போரினால் நாம் களைத்துவிட்டோம்

### - மங்கள முனசிங்க

(புதுடில்லி)
எங்கள் சின்னஞ்சிறு நாட்டில் இடம்பெற்ற போரினால் நாமெல்லாம் களைப்படைந்துவிட்டோம் பல குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்துவிட்டன. இந்தநிலையில் தான் எங்கள் ஜனாதிபதி பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்னைக்கு தீர்வுகாணமுன்வந்தார்.

இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர்

(2ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதமிருக்கும் போர்க் கைதிகள் நிலை பற்றி கொழும்புக்கு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
உண்ணாவிரதம்இருக்கும் போர்க் கைதிகள் தொடர்பாக யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் கொழும்பில் உள்ள அரசாங்க அதிகாரிகளுடன் நேற்று மாலை தொடர்பு கொண்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக ஏற்கனவே இந்தக் கைதிகள் பற்றிய தகவல்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும், ஜனாதி

(4-ம் பக்கம் பார்க்க)

சமாதான

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பான விவாதத்தை முடித்து வைத்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

இனத்தகராறைத் தீர்த்து வைத்து சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இயன்ற சகல நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது.

பிரச்னைகளை இனம் கண்டு படிப்படியாக அதனைத் தீர்த்து வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

சமாதான வழிகள் மூலம் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உறுதி எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாருயினும் இந்த நடவடிக்கை தோல்வி கண்டால், மாற்று வழிகள் நாடப்படும் என்று தெரிவித்தார். -இ

---

போரினல் நாம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மங்கள முனசிங்க இந்திய ஜனதிபதி முன் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளும்போது உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், 1970களிலிருந்து இலங்கையில் தெற்கிலும் வடக்கிலும் எழுந்த தீவிரவாத பிரச்னைகளால் நாடு இன்னலுக்குள்ளாகியுள்ளது.

ஜனதிபதி சந்திரிகா துணிவுடன் இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முன்வந்துள்ளார், அவரே சமாதான முயற்சியை முன்னெடுத்தார். இப்பிரச்னைகளால் அல்லலுறுவோருக்கு ஆக்கபூர்வமான சில சலுகைகளை எற்கனவே வழங்கியுள்ளார்.

இடைக்கால சண்டை நிறுத்தம நிரந்தர போர் நிறுத்தத்திற்கு இட்டுச்செல்லப்படுகிறது. இம்மாதம் அரச செயலணியினர்புனர்நிர்மாண புனருத்தாரண வேலைகளை ஆரம்பிக்கவுள்ளனர்

சமாதானத்துக்கான வழி திறக்கப்பட்டுள்ளது, அங்கு நிரந்தர சமாதானம் ஏற்படுமாயின் இந்த வலய நாடுகளில் பிணக்குகள் அற்ற நாடாக இலங்கை திகழும் என கூறினர். கே-இ

# சிறுரக மின் பிறப்பாக்கிகள் மூலமே உடனடியாகமின்சாரம்வழங்கமுடியும்

(யாழ்ப்பாணம்)

1990 ஜூனில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்க முன்னர் தமிழ்ப் பிரதேசம் எங்கும் நீர் மின்சாரமும் இருந்து வந்தது. அதேசமயம் சுன்ஞகம் மின் நிலையத்தில் சேவை மூலமும் மின்வழங்கும் நடவடிக்கைகள் இருந்து வந்தது. இவற்றை விட தனியாரும் தமது சொந்த தேவைகளுக்காக மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்தி வந்தனர். அரசாங்கத்தின் யுத்த நடவடிக்கையின் காரணமாக இன்று நீர் மின்சார விநியோகத்திற்கான மின் கம்பிகளும், கோபுரங்களும் அழிந்துள்ளன, சுமார் 77 கோபுரங்கள் புதிதாக நிர்மாணிக்கப்படவேண்டும். அத்துடன் மின்கம்பிகள் புதிதாக நிறுவவேண்டும்.

மேலும் சுன்ஞகம் மின்நிலயம் குண்டுத்தாக்கிதலால் முற்ருக சேதமடைந்துள்ளது. அங்குள்ள எரிபொருள் தாங்கி மின்மாற்றிகள், மின்பிறப்பாக்கிகள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன. இவை அனைத்தும் புதிதாக அங்கு மீளவும் நிர்மாணிக்கப்படவேண்டும். சுன்ஞகத்தில் உள்ள மின்மாற்றிகள் மிகப் பழமை வாய்ந்தவை இதனைத் திருத்தி பாவிப்பதாஞல் பெரும் செலவு ஏற்படுமே தவிர இதிலிருந்து 5 மிகவாட் மின்னை பெற முடியுமா என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். சுன்ஞகம் மின்நிலயம் உடபட தமிழீழத்தின் மின் வழங்கல் பற்றிய சாத்தியப்பாட்டை ஒரு உயர்மட்ட பொறியியல் ஆலோசனைக் குழு மூலம் விடுதலைப்புலிகள் ஆராய்ந்த பின்னரே இதுபற்றிய விபரத்தை பேச்சுவார்த்தையில் முன்வைத்தனர்.

சுனஞகத்தில் இருந்தது போன்ற பெரிய அளவு வலுக்கொண்ட மின்பிறப்பாக்கிகள் குடாநாட்டுக்கு கொண்டுவருவதாயின் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று கப்பல. மற்றையது நெடுஞ்சாலை, கப்பல் மூலம் இவை கொண்டுவரப்படினும் பாரிய இயந்திரங்களை இறக்குவதற்கான வசதிகள், துறைமுக வசதிகள் இல்லை. இதனல் தான் பாதை திறக்கவேண்டுமென விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர்.

நீர்மின் இங்கு கொண்டு வருவதோ அல்லது சுனஞகத்தை உடன் இயங்க வைப்பதோ உடனடியாக செய்து முடிப்பது சாத்தியமில்லை. மேலும் நீர்மின் எங்காவது தடைப்பட்டால் இங்கும் மின் கிடைக்காது. இதஞல் யாழ் குடாநாடு பாதிக்கப்படும் இவை இரண்டு முறையாலும் மின் வரப பல மாதங்கள் ஆகலாம் என்பதாலும் நீண்ட அந்த இடைவெளிக் காலத்தில் இங்குள்ள மக்கள் இருளில் இருப்பதனை தவிர்க்கவும் 500 கிலோவற்றில் 15 உம், 250 கிலோவற்றில் 78 உம் வலுகொண்ட சிறிய ரக 93 மின்பிறப்பாக்கிகள் கேட்கப்பட்டன.

இந்த மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்னை வழங்கும் சமகாலத்தில் உயர்வள மின் கோபுரங்களின் திருத்தவேலைகளையும் மேற்கொள்ள முடியும். இங்கு எரிபொருள் பாவனை, விறகு, விவசாயம் தொழிற்சாலைத் தேவை போன்ற இன்னேரன்ன தேவைகளுக்கு மாற்றீடாகக் குறைந்த விலையில் மின்னை வழங்குவதன் மூலம் உற்பத்தி செலவை குறைத்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். வடமாகாணத்திற்கு மட்டும் 27000 கிலோவற் மின் தேவை இதற்கு 12000 பரல் டீசலும் 90 பரல் உராய்வு நீக்கி ஆயிலும் மாதம் ஒன்றிற்கு தேவை. யாழ். குடாநாட்டிற்குமட்டும் 25000 கிலோவற் மின் தேவை. இவை முன்னைய கணிப்பு ஆகும். தற்போது தேவை இதனைவிடக் கூடுதலாகவே இருக்கும்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட ஒவ்வொன்றும்300 கிலோவோல்ற் அம்பியஸ் மின்வலு கொண்ட இரண்டு மின்பிறப்பாக்கிகளும் ஏறகனவே கொழும்பில் பாவனையில் இருந்தவையாகும். இவை வடதமிழீழத் தேவையின் 2%த்தை தன்னும் பூர்த்தி செய்ய மாட்டாது. யாழ் குடாநாட்டுத் தேவையின் 5%த்தை தன்னும் பூர்த்தி செய்யப் போதுமானதல்ல.

யாழ். மாநகரசபை எல்லையை மட்டும் எடுத்துக்கொண்டால் 18700பேர் மின்னைப்பெற்று வந்துள்ளனர் வீதி மின்விளக்குகள் பொதுத் தேவைகளைவிட யாழ் மாநகர சபை பகுதிக்குள் மட்டும் தேவையான மின்னின் அளவு 7000—7500கிலோவற்எனவே அரசிஞல் அனுப்பப்பட்ட மின் பிறப்பாக்கி யாழ். மாநகர சபையின் தேவையின் 8%த்தை தன்னும் பூர்த்திசெய்ய மாட்டாது.

இந்த இரண்டு மின்பிறப்பாக்கிகளுக்குமே மாதம் ஒன்றுக்கு 525 பரல் டீசல்தேவை அத்துடன் உராய்வு நீக்கி எண்ணெயும் தேவையாகும். எரிபொருள் தடை முற்ருக நீக்கப்படாத இவ்வேளை இதற்கான எரிபொருளைக் கொண்டு வருவது எப்படி எரிபொருள 3 மாத காலத்திற்கான கையிருப்பு அவசியமாகும். அத்துடன் இவற்றுக்கான உதிரிபாகங்களும் இல்லை. இவை பழுதடைந்தால் மீண்டும் இருளில் வாழும் நிலையே உருவாகும்.

இவை அனைத்தையும் ஆராய்ந்த பின்னரே விடுதலைப்புலிகள் இங்கு நீர் மின்னியல். சுன்ஞகம்மின்நிலயத்திருத்தம் நடையெறும் போதே சிறுரக மின் பிறப்பாக்கிகள் மூலம் மின்வழங்குவதோடு அவற்றுக்குத் தேவையான எரிபொருளையும் கையிருப்பில் ஆகக் குறைந்தது மூன்று மாதங்களுக்கு வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்திஞர்கள். -சி

---

## கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

இன்று 7-ம் திகதி கப்பலில செல்லவிருக்கும் பயணிகள் காலை 8 00 — 9.00 மணிக்குமிடையில் பருத்தித்துறைத் துறைமுகத்தில் சமுகமளிக்கவேண்டுமெ என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் மார்ச் மாத இரண்டாவது கப்பல் சேவை மார்ச் மாதம் 10 ஆந் திகதி நடைபெறும் எனவும், அந்தக் கப்பலுக்கு ஆசனத்திற்காக விண்ணப்பித்தவர்கள் யாழ். செயலகத்திற்கு வந்து பணத்தைக் கட்டும்படியும் யாழ். செயலகம் மேலும் அறிவித்துள்ளது.

(162-இ


உ

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் — தில்லையம்பதி

அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்



**பங்குனி உத்தர இலட்ச அர்ச்சனையும்**

**விசேட திரவ்விய ஹோமமும்**

**7-3-95 முதல் — 17-3-95 வரை**

தினமும் மாலை 5 மணிக்கு அம்பாளுக்கு
அபிஷேக ஆராதனையும் அர்ச்சனையும் நடைபெறும்.

★ 15-3-95 சங்கிராந்தி உற்சவம் — (காலை 6 மணி)

★ 16-3-95 வியாழக்கிழமை காலை நடைபெறுகின்ற 64 உபசார விசேட பூசை வழிபாட்டுடன் இலட்ச அர்ச்சனை நிறைவு பெறும்

★ 16-3-95 மாலை பௌர்ணமி திருவிளக்குப் பூசை அம்பாள் தெருவீதி உலாவருதல்.

★ 17-3-95 . வெள்ளிக்கிழமை காலை பங்குனி உத்தர நவோத்திர சகஸ்ர

**1009 சங்காபிஷேகமும**

நண்பகல் மகேசுர பூசையும் (அன்னதானமும்) நடைபெறும். மாலை திருவூஞ்சலும், ஸ்ரீ விநாயகப்பெருமான், ஸ்ரீ சிவகாமி அம்பாள், வள்ளி, தெய்வயானை சமேத ஸ்ரீ முருகபபெருமான் பூந்தண்டிகையில் தெருவீதி உலா வருதலும் நடைபெறும்.

கிரியைகள் நடாத்துபவர் : சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக்குருக்கள்

தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8 மணி வரை.

★ தெய்வீகப்பேருரை ★

நிகழ்த்துபவர் : தமிழருவி த. சிவகுமாரன்
(ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி — காரை கம்பன் கழகம்)

இங்ஙனம்
பரிபாலன சபை.

தில்லையம்பதி, 6-3-95.

அன்பளிப்பு;
பாலா வீடியோ [ படப்பிடிப்பாளர் ]
கோண்டாவில் — தில்லையம்பதி

(சி-1407)



## தமிழீழ நிர்வாக சேவை

## விளம்பரம்

01. உழவுயந்திரம் வாடகைக்குத் தேவை
உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

02. கொங்கிறிற் கலவை சாதனம்
கொக்கிறிற் மிக்சர் (Concrete Mixer) விலைக்கு வாங்கப்படும். வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

03. சொகுசு பஸ் சேவை
மங்கள வைபவங்கள், சுற்றுலாத் தேவைகள், மற்றும் பயணத்தேவைக்கும் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:.

பொறுப்பாளர்,
வேலைப் பகுதி,
தமிழீழ நிர்வாக சேவை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(எ- 4808)



## கண்ணீர் அஞ்சலி

வடஇலங்கைச் சங்கீத சபையின்
உபதலைவர் அறிஞர்

## இராமுப்பிள்ளை சிவானந்தன்

அவர்கள்

வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவரும், யாழ்ப்பாணக் கல்வி வலயம் 01இன் சிரேஷ்ட பிரதிக் கல்விப் பணிப்பாளரும் (கல்வி அபிவிருத்தி) ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளரும், நுண்கலை மன்றத்தின் உபதலைவருமான அறிஞர் இராமுப்பிள்ளை சிவானந்தன அவர்கள் இறைபதம் எய்தியமை குறித்து வ. இ. ச. சபையின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை அன்ஞரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னரது ஆத்மா சாந்தியடைவதாக என்றும் பிரார்த்திக்கின்ருேம்.

கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்.
07-02-95

வ. இ. ச. சபையின்
தலைவரும், செயற்குழுவினரும்

(ஏ-4809)

நல்லூர் இணை நூலகம்.

மணிவாக்கு

வறுமை, வியாதி, கஷ்டங்கள், சிறைவாசம் மற்றும் உள்ள துன்பங்கள் எல்லாம் அவரவர்கள் செய்த பாவங்கள் என்ற மரத்தில் பழுக்கும் பழங்களாகும்.

—சணக்கியநீதி

# ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் ஜே. ஆர். நிறுத்தப்பட வேண்டும்

(கொழும்பு)

அதிகார துஷ்பிரயோகம், அடிப்படை உரிமை மீறல், மனித உரிமை மீறல், அரசியல் அமைப்புக்கு அப்பால் செயல்பட்டமைக்காக முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதி ஆணைக்குழு முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவேண்டுமென கொழும்பு பத்திரிகை ஒன்று கோரிககை விடுத்துள்ளது

ஜே. ஆர். மீதான விசாரணைகள் பகிரங்கமாக இடம் பெறவேண்டும் அவரது ஒவ்வொரு, மக்கள் விரோத செயல்களும் மக்கள் முன் அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் முதல் நபராக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படவேண்டும். அதேபோல ஜே. ஆரின் ஆணைகளை செயல்படுத்திய அரச மட்ட உயர் அதிகாரிகளும், ஆயுதப்படை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் இவ்வாணைக் குழு முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவதுடன் இவர்களுக்கு கடும் தண்டனை வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. -சி

## நமது நோக்கு

### முத்திரை பாடமென்ன?

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற ஐம்பதாவது ஆண்டு நிறைவையொட்டி அமெரிக்கா ஒரு முத்திரை வெளியிட உத்தேசித்துள்ளது.

1945 ஜூன் 6-ம் நாள் ஹிரோசிமா மீது அமெரிக்கா அணு குண்டைப் போட்டதல்லவா?

அப்போது எழுந்த காளான்வடிவிலான புகை மண்டலத்தைப் படமாக அந்த முத்திரையில்போட எண்ணியது.

அது மாத்திரமல்ல — 'போரின்முடிவினைவிரைவ படுத்திய அணுக்குண்டுக்கள் என்ற வாசகத்தையும்' படத்கின்கீழ் பிரசுரிக்க எண்ணியது.

இச்செய்தி வெளிவந்ததும ஜப்பானில் எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியது.

காரணமென்ன? போடப்பட்ட அணுக்குண்டினால் பல்லாயிரக்கணக்கானவர்கள் மாண்டுபோனது மாத்திரமல்ல, பல சந்ததிகளையே பாதிப்படையச் செய்யும் டக்கவிளைவுகளையும் ஏற்படுத்தியது.

ஜப்பானியர் அந்தக் குணடு செய்த வடுக்களை மறக்கவில்லை. அமெரிக்கா செய்த யுத்தக் கொடூர அநீதியை அவர்கள் மன்னிக்கத் தயாராக இல்லை.

போரை விரைவாக முடிவுக்குக் கெண்டுவரத்தான் அணுக்குண்டு போடப்பட்டது என நியாயம் கற்பிக்கிறது அமெரிக்கா

ஆனால்—போரினால் ஏற்பட்ட கொடூரங்களால் அந்த நியாயத்தை ஏற்கும் மனோபாவத்தில் ஜப்பானியர் இல்லை என்பதையே உலகம் உணர்ந்துள்ளது.

விளைவு என்ன தெரியுமோ? முத்திரை வெளியிடுவதை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

இங்கு — இனப்பிரச்னையை விரைவாகத் தீர்ப்பதற்கு இராணுவத்தீர்வு பற்றியும் சிந்திக்கப்படுகிறது.

போரினால் ஏற்படும் வடுக்களை மக்கள் எளிதாக மறந்து விடமாட்டார்கள் என்பதை அவர்கள் எண்ணத் தவறுவதேன்?

மேலும் வடுக்கள் தொடர்ந்தால் இரு நாடுகள் உருவாகும் நிலையே விரைவுபடுத்தப்படுமல்லவா?

# ★ திருமலை வைபவத்திற்கும் 3½ மணி நேரம் தாமதித்தே ஜனாதிபதி சந்திரிகா வந்தார்

(திருமலை)

திருமலையில் இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்ட ஜனாதிபதி சந்திரிகா அவ்வைபதத்திற்கு சுமார் மூன்றரை மணிநேரம் தாமதித்தே வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலையில் நேற்றுமுன் தினம் ஜனாதிபதி சந்திரிகா துப்பல் துறையின் மாதிரிக் கிராமம் ஒன்றை திறந்து வைத்தார். இவ்வைடவதிற்கே அவர் மூனறரை மணி நேரம் தாமதித்து வந்தார்.

திருமலைக்கு முதன் முறையாக இவர் விஜயம் செய்துள்ளதால் பாதுகாப்பு காரணங்களாலேயே இவரது வருகையில் தாமதமேற்பட்டதாக அரச தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளபோதிலும் ஜனாதிபதி இதுவரை எந்தவொரு வைபவத்திற்கும் குறிப்பிட்ட நேரத்திற்கு சென்றதேயில்லை என கொழுப்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் விஜயத்தையொட்டி திருமலையில் கடந்த சில தினங்களாக மிக அதிகளவில் பாதுகாப்பு போடப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. -சி

'லக்பிம' பத்திரிகைக்கு எதிராக

# ரூ. 5 கோடி நஷ்டஈடு கோரி

## அமைச்சர் குணரத்ன வழக்கு தாக்கல்

(கொழும்பு)

கைத்தொழில் அமைச்சர் திரு. சி. வி. குணரத்ன 'லக்பிம' சிங்களப் பத்திரிகைக்கு எதிராக 5 கோடி ரூபா மான நஷ்டம்கோரி வழக்கு தாக்கல் செய்யவுள்ளார்.

கடந்த மாதம் 5ம் திகதி இந்தபபத்திரிகையில் வெளிவந்த கார்ட்டூன் சித்திரம் தொடர்பாகவே அமைச்சர் குணரத்ன 'லக்பிம' பத்திரிகைக்கு எதிராக இந்த மான நஷ்ட வழக்கைதாக்கல்செய்யவுள்ளார்.

இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் குணரத்ன தனது வக்கீல்களை கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக்காலமாக பொ. ச. மு. அரசும் அதன் அமைச்சர்களும் எம். பிக்களும் பத்திரிகைகளுக்குஎதிராக வழக்கு தாக்கல் செய்வதும், பத்திரிகைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அண்மையில் 'சண்டேலீடர்' ஆசிரியர் இனந்தெரியாதோரினால் தாக்கப்பட்டதும் 'சண்டே ரைம்ஸ்' ஆசிரியர் 4ம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதும் தெரிந்ததே. -சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995—03-07**

செவ்வாய் இரவு

08-01 - ஊற்சுற்றும் ஒலிவாங்கி
08-10 - அறிந்துகொள்ங்கள் - தகவற்களஞ்சியம்
08-20 - நலந்தானா நிகழ்ச்சியில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறப்பித்தலுக்கான காரணங்கள் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08-30 - செய்திகள்
08-40 - கருத்துக்களம் இ. இராஜேஸ்வரன் எழுதிய ''புரிந்துணர்வு''
08-50 - மலரும் மொட்டுக்ள்

**1995-03-08**

புதன் காலை

07-02 - மாவீரவணக்கம்
07-15 - நீங்கள் கேட்டவை
07;30 - செய்திகள்
07-35 - பத்திரிகைச் செய்திகள்
07-40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-07**

செவ்வாய் மாலை

05-01 - சிந்தனைச்சிதறல்
05:02 - எழுச்சிகீதம்
05-10 - புதியவை
05-15 - தமிழிசை
05-30 - வானொலிமதியூகம்10
06-00 - சிந்தனைக்குச் சில விடிைகள்
06-02 - இவ்வாரம் இவர் - நிகழ்ச்சியில் விளையாட்டு வீராங்கனை செல்வி ஆனந்த நாயகி அவர்களுடனான சந்திப்பு
06-15 - விளையாட்டுச் செய்திகள்
06-20 - என்தெரிவு
06-30 - மாலை நிகழ்ச்சிள் யாவும் நிறைவு பெறும்.

## இராசி பலன்

07-03-1995

செவ்வாய்க்கிழமை

**(தமிழுக்கு மாசி —23)**

ஷஷ்டி ந. இ 12-05 வரை: பரணி காலை 7-33 வரை: சித்தயோகம் ஷஷ்டி விரதம் கார்த்திகை விரதம் இராகு காலம் காலை 7-55 முதல் 9.25 வரை: சுபாவளை காலை 10-55 முதல் 12-55 வரை

மேடம்: பணிகளில் அனுகூலம், தனப்பிறப்தி' கௌரவம்.

இடபம்: அசாத்திய சிந்தனைகள் வேலைப்பழு, குடும்ப கவலை.

மிதுனம்: சாஸ்திர ஆராய்ச்சி, நணபர் உதவி, தொழில் லாபம.

கடகம்: முயற்சி வெற்றி, சமாதான முயற்சி, பாராட்டு

சிங்கம்: பெரியோர் பகை. குழந்தை நினைவு, அலைச்சல்.

கன்னி: கோபப்பேச்சு, முரண்பாடு, ஆசாரக்குறைவு.

துலாம்: தந்தையர் ஆசி, பணவசதி, இனசன உதவி.

விருச்சிகம்: பந்துக்கள் விவாதம், பயண ஏற்பாடு, விவேகம்.

தனுசு: மனவேதனை. தைரியம் குன்றல், எதிர்பாராத செலவு.

மகரம்: வைத்திய செலவு. அற்பர் நேசம் வீண்பழி.

கும்பம்: பிரபலஸ்தர் சந்திப்பு விருந்தோம்பல், மனைவி புகழ்.

மீனம்: உறவினர் கோபம், முதியோர் சிந்தனை, கடின வாக்கு.

— ஜோஸ்யர்

## பலதும் பத்தும்

### கை பார்த்து...?

கை பார்த்தே சில நோய்களை நிர்ணயம் செய்வார்களாம் மருத்துவ நிபுணர்கள். இருதய நோய்கள் சிலவற்றில் விரல்களின் நுனிகள் தடித்து நீல நிறமாயிருக்கும் 'மங்கோலிசம்' என்ற பிறவி நோயில் உண்டு விரல்கள் இரண்டும் ஒரு பக்கமாக வளைநதே இருக்கும்.

கொக்கிப் புழுவால் ஏற்படும் சோகையில...கைகள் வெண்மையான காகிதம் போன்று வெளிறியிருக்கும்; நகங்களிற் குழி விழுந்திருக்கும். மஞ்சள் காமாலை நோய் வந்தால் கைகளும் சற்று மஞ்சளாக இருக்குமாம்.

'மிக்சடிமா' நோயினால் உள்ளங்கை குளிர்ந்தும், தோல் தடித்தும் இருக்கும். இதன்காரணம் 'தைரொயிட்' மந்தமாகச் செயற்படுவதே. அது மிதமாகச் செயற்பட்டாலோ கைகள் நடுக்கத்தோடு வெப்பமாகக் காணப்படும். விரல்களில் நடுக்கம் தோன்றினால் சில வேளை......'பார்கின்சன்' நோயாக இருக்கலாம்.

கை...வெப்பமாகச்சிவந்திருந்தால்... 'அது'தான் அதாவது மது உள்ளே...!

— மயூரன்

## அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டி

[கொழும்புத்துறை]

யாழ். ரோட்டறிக் கழகம் அங்கவீனர்களுக்கான இலவச முச்சக்கர வண்டிகளை தகுதி வாய்ந்த அங்கவீனமான இருபாலாருக்கும்வழங்கவுள்ளது.

மேற்படி வண்டியைபெற்று அதன் மூலம் தமது வாழ்வை மேம்படுத்த விரும்பும் அங்கவீனர்கள் பின்வரும் முகவரியில் தொடர்புகொண்டு அதற்குரிய விண்ணப்பப்படிவத்தை பெற்று உரியவாறு பூர்த்தி செய்து தலைவர், யாழ் ரோட்டறிக் கழகம், இல 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. -154

## இன்று

(யாழ்ப்பாணம்)

சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களின் பெப்ரவரி மாதத்திற்கான சம்பளம் இன்று 7ம் திகதியும் நாளை 8ம் திகதியும் காலை 9மணி முதல் நண்பகல் 12மணிவரை யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கூட்டுத்தாபன கணக்காளர் திரு. க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

0 0 0

(அரியாலை)

கோப்பாய் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் இன்று 7ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது. 59

## தவக்கால நற்சிந்தனை

''இதோ! ஏற்புடைய காலம் இதுவே மீட்பின் நாள் இதுவே''
(2 கொரிக் 6: 2ஆ)

''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்பது உலக றிந்த மொழி. காலம் விலையேறப் பெற்றது. வீணில் கழித்தால் கவலையடைவோம். அதுபோல் எமக்குத் தரப்பட்ட இம் மீட்புக் காலம் அரிதிலும் அரிது. சென்ற வருடம் எம்மோடு இருந்தவர்கள் இன்று இல்லை எனவே இவ் ஏற்புடைய இக்காலத்தை நம் மீட்பின் காலமாகக்கொள்வோம். மீட்படைய ஆவன செய்வோம்,

தா. மைதிலி

காடின்றி மழையில்லை
காற்றின்றி உயிரில்லை

# மாதம் 16 லட்சம் லீற்றர் மண்ணெண்ணெ எடுத்துவர அனுமதி

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் அங்கீகாரம் பெற்ற எரிபொருள் விற்பனையாளர்களுக்கு கப்பல் மூலம் கொழும்பிலிருந்து மண்ணெண்ணெ எடுத்துவந்து விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாதம் ஒன்றிற்கு 16லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயை விசேட கப்பல் மூலம் எடுத்து வருவதற்குரியவசதியை யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலம் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

தற்பொழுது யாழ். மாவட்டத்தில் 16 எரிபொருள் விற்பனையாளர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் முகவர்களாக பதிவு செய்துள்ளதால் அவர்கள் இதற்கான அனுமதியை யாழ். பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளர் எஸ். சிவஞானத்திடம் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது வடபகுதிக்கு மண்ணெண்ணெய் எடுத்து வருவதற்கு எதுவித கட்டுப்பாடும் கிடையாது எனவும் தேவையான கப்பல் வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. க-இ

# நெசவுப் போதனாசிரியர் பதவி வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் நெசவுப் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், நெசவுத் தொழில் சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும்.

இம்மாதம் 31ம் திகதிக்கு முன் விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். போட்டிப் பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்கள் தெரிவு செய்யப்படுவர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கிராமிய அபிவிருத்திஅமைச்சு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. க-சி

---

## பேச்சு முறிந்தால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் இரகசியமாக வைத்திருக்கும்படி குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் ஜனாதிபதி எமது பதிலை பி. பி. ஸிக்கு தெரிவித்ததுடன், எமது பதிலை வேறுவிதமாகத்திரித்து பொய் பிரசாரம் செய்துள்ளார்.

சர்வதேச பிரதிநிதிகள் குழு யாழ். நகர் வரும் இவ்வேளையில், ஜனாதிபதியின் இந்த பொய்பிரச்சாரம், எமக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிடும் இதைத் தெளிவுபடுத்தி, உண்மைநிலையை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தவே நாம் விரும்புகின்றோம்; என்று கூறினர். ;வி-இ

## இனப்பிரச்னைத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று யாழ் நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில். கலாநிதி பாலசிங்கமும், அரசியல்துறைப் பொறுப்பாளர்திரு.சு.ப.தமிழ்செல்வனும் கலந்து கொண்டனர்.

கலாநிதி பாலசிங்கம் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க சர்வதேச மத்தியஸ்தர் ஒருவரைத்தான் நியமித்ததாகவும் அதை விடுதலைப்புலிகள் மறுத்துவிட்டதாகவும் பி பி. ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்டுள்ளார்.

உண்மையான நிலை என்ன என்றால், 20-02-95ம் திகதி ஜனாதிபதி சந்திரிகா தலைவர் பிரபாகரனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அதில், ''இனப் பிரச்னை பற்றி கருதது யோசனைகளைப் பரிமாறிக்கொள்வதற்காகத் தனிமனிதர் ஒருவரை நியமிப்பதற்குத் தாம் விரும்பி இருப்பதாகவும், இவர் எனது கருத்துக்களை உங்களுக்கும், உங்களின் கருத்துக்களை எனக்கும் தெரிவிப்பதில் மிகவும் இரகசியமாக மத்தியஸ்தம் வகிப்பார். ஆனல் அவர் ஒருபோதும் தமது கருத்துக்களைத் தெரிவிக்கமாட்டார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிரான்சுவா மிசேல் என்பவரைத் தாம் நியமித்திருப்பதாகவும், இவர் ஹெயிட்டியிலும், எத்தியோப்பியாவிலும் பிரான்ஸ் நாட்டுத் தூதுவராக முன்னர் கடமையாற்றியவர்'' என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்,

இக்கடிதத்துக்கு தலைவர் திரு பிரபாகரன் 25-02-95-ம் திகதி பதிலளித்தார்.

எங்களால் நியமிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளுக்கும் உங்களால் நியமிக்கப்பட்ட நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதையே நான் விரும்புகின்றேன் இப்படியான பேச்சுவார்த்தைகள் பற்றி அவ்வப்போது எமது மக்களுக்குத் தெரியப்படுத்துவதையும் இப்பேச்சுவார்த்தைகள் பகிரங்கமாக நடப்பதையும் நாங்கள் விரும்புகின்றோம்.

## 12 நாடுகளின்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்குமிடையில் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகள் சுமார் இருமணித்தியாலங்களுக்கு நடைபெறுமென்று கூறப்படுகின்றது.

இக்குழுவினர் பின்னர் பல இடங்களுக்கும் சென்று நிலைமைகளைப் பார்வையிடுவர் என்றும் தெரியவருகின்றது. வி-இ

## நான்காம் கட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

அரசின் அக்கறையற்ற போக்கினால் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய போர் கண்காணிப்புக் குழுவினர் இன்னும் கொழும்பிலேயே அரசின் கட்டளைக்காக காத்துக் கிடக்கின்றார்கள்.

முழுமையான போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி பொருளாதாரத் தடையை முற்றாக நீக்கிய பின்பே வடபகுதிக்கான பாரிய அபிவிருத்தி பணிகளை மேற்கொண்டால் சிறப்பாக இருக்கும். இதையே எமது மக்களும் விரும்புகின்றார்கள் என்று நாம் பலதடவைகள் அரசுக்கு வலியுத்தி வருகின்றோம்.

ஆனல் அரசு வெளிநாட்டுக் கடன்களை கூடுதலாகப் பெற்றுக் கொள்வதற்காக வடபகுதி அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து விட்டதாகவும், யாழ். நகருக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஜெனரெட்டர்களை கப்பல் மூலம் அனுப்பிவிட்டதாகவும் சர்வதேசம் நம்பும்படி பிரச்சாரம் செய்கின்றது.

அரசு யாழ். நகருக்கு மின்சாரம் வழங்குவதற்காக அனுப்பிய இரு ஜெனரேட்டர்களும் மிகவும் பழமை வாய்ந்தவை. இவற்றைஇயங்கச் செய்வதற்கு தினமும் 300 லீற்றர் டிசல் வேண்டும். ஆனல் அரசு டீசலுக்குத் தடைவிதித்துள்ளது.

அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் நடாத்துவதில் தற்போது ஒரு தந்திர வழியையே நாடுகின்றது. அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையில் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காக ஜனாதிபதி நியமித்த பிரான்ஸ் நாட்டவர் ஜனாதிபதி பாரிசில் கல்வி கற்கும் போதே நன்கு தெரிந்தவர். ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. -வி-இ

---

சர்வதேசமும், பொதுமக்களும் எமது பேச்சுவார்த்தைகளை மிகவும் உன்னிப்பாகவே அவதானித்து வருகின்றனர். ஆகவே, எமது இரு பகுதியினரினதும் கருத்துக்களை சுமந்து செல்வதற்கு தனிப்பட்ட ஒரு நடுவரைப் பாவிப்பது உகந்ததல்ல'' என்று குறிப்பிட்டிருந்தார் எனக் கூறினர். [வி-இ)

# வடக்கு புனரமைப்பு பணி: விசேட செயலணிக் குழுவில் புலிகளைச் சேர்க்க முடிவு

(கொழும்பு)

வடக்கில் புனர்நிர்மாண வேலைகளையும் அபிவிருத்தி வேலைகளையும் மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள விசேஷ செயலணிக் குழுவில் விடுதலைப் புலிகளையும் சேர்த்துக் கொள்வதற்கு நாம் தயாரா இருப்பதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே.பிரபாகரன் இலங்கை அரசுக்கு கடைசியாக எழுதிய கடிதத்துக்கு பதிலளிக்கும் விதமாக அரசு இந்த முடிவுகுகு வந்துள்ளதாக அகில இந்திய வானெலி நேற்று அதன் நள்ளிரவு செய்தியில் தெரிவித்தது.

பொதுநிர்வாக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இந்த விசேட செயலணிக்குழுவுக்கு தலைமைவகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. -இ

## திருமலை படைத்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளார்

இம்மாதம் டென்மார்க்கில் நடைபெறவுள்ள சமூக அபிவிருத்தி மாநாட்டுக்கும் ஜனாதிபதி சந்திரிகா செல்லவுள்ளார்.

அவர் அங்கு இலங்கையின் இனப்பிரச்னை தீர்வுகுறித்து உலக நாட்டுத் தலைவர்களுடன் கலந்துரைடவும் உள்ளார். (இ)

## தாண்டிக்குளத்துக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்று இராணுவ முகாம்களைப் பார்வையிட்டதுடன் தாண்டிக்குளம் சோதனை முகாம், ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்தனர்.

பின்னர் இவர்கள் திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய இடங்களிலுமுள்ள இராணுவ முகாம்களையும் விமானமூலம் சென்றுபார்வையிட்டனர்.

அமைச்சருடன் ஜனதிபதியின் செயலாளர் திரு. பாலபத்தபெண்டி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சந்திரானந்தடி சில்வா,ராணுவத்தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா, விமானப் படைத்தளபதிஏயார்மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா, பொலிஸ் மாஅதிபர் பிராங்டி சில்வா, பிரதிபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. பந்துசேன ஆகியோரும் இந்த இடங்களுக்குச் சென்றது குறிப்பிடத்தக்கது. -வி-இ

## உண்ணவிரதமிருககும்

(1ம் பககத் தொடர்ச்சி)

பதிக்கும், அவரது செயலாளர்க்கும் இவர்கள் நிலை பற்றி அறிவிக்கும்படியும் அரச அதிபர் கொழும்பில் உள்ள அதிகாரியைக் கேட்டுக் கொண்டார்.

கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைமை அலுவலத்துடனும் தொடர்புகொண்டு கைதிகள் அனுப்பிய தகவல்களைப் பெற்றுகொள்ளும்படியும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

போர்க் கைதிகள் கடந்த முதலாம் திகதி முதல் உண்ணவிரதத்தை ஆரம்பித்ததைச் சுட்டிக்காட்டிய அரச அதிபர் இது ஒரு மனிதாபிமான விடயம் என்பதால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் எனத தெரியப்படுத்தினர்.

இதுவரை அனுப்பப்பட்ட தகவல்களுக்கான பதிலை தான் எதிர்பார்த்திருப்பதாகவும் அரச அதிபர் கொழும்பு அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினர்.

எனினும் நேற்றுமாலைவரை ஸ்ரீலங்கா அரசிடமிருந்து எதுவித பதிலும் யாழ்ப்பாணத்துக்குள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. -இ.

# புலிகள் குற்றச்சாட்டுக்கு அரசு மறுப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையை இலங்கை அரசாங்கம் வேண்டுமென்றே தாமதப்படுத்தி வருவதாக விடுதலைப் புலிகள் கூறுவதை, இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளதாக பி. பி. சி. கொழும்பு நிருபர் லூசியன் கருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஏழு பக்க அறிக்கையை ஜனதிபதி செயலகம் வெளியிட்டுள்ளதாகவும், இந்த அறிக்கையில் ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரிமாறப்பட்ட மூன்று கடிதங்களும் வெளியிடப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு அரசுப் பிரதிநிதிகளை விடுதலைப் புலிகள் அழைத்தது சமாதானப் பேச்சுவார்த்தைக்காக அல்ல. பூநகரி இராணுவ முகாமை அகற்றுதல், கிழக்கில் தடையின்றிப் புலிகள் ஆயுதங்களுடன் நடமாடுதல் போன்ற தேவைகளுக்காகவே எனவும் அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாம்.

அமைதி நிலையை ஏற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும், யாழ்ப்பாணத்திற்குப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான தடைகளை அகற்றல், யுத்தத் தவிர்ப்பு நிரந்தர யுத்த நிறுத்தமாக மாற்றப்படல், வடபகுதியில் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக அதிகார சபை ஒன்றை ஏற்படுத்தல் போன்ற நிபந்தனைகளை விதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

யுத்த தவிர்ப்பு ஒப்பந்தம் அமுல் செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்துவிட்ட இந்நிலையில் வெளியிடப்பட்ட இவ்வறிக்கையில், அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் அமைதியை விரும்புகின்றனர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளது. க-இ

## பிரதி கல்விப்பணிப்பாளர் சிவானந்தன் காலமானர்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயம் 1இன் பிரதிக கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் நேற்றுகாலமானர்.

இவர், நீண்ட காலம் கல்விச் சேவையில் பணியாற்றியவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. -இ

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை அதிபர்கள். ஆசிரியர்களுக்கான விசேடகூட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணிக்கு மருதனர் மடத்தில் உள்ள மகாஜனக்கல்லூரியில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கம்பராமாயணம் தொடர் விரிவுரை

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஞான வைரவசுவாமி தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 10 தினங்களுக்கு 'வாகீசகலாநிதி' கனகசபாபதி நாகேஸ்வரன் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

'கம்பராமாயணம்' என்னும் பொருளில் இத்தொடர் பேருரை அமையும். -இ

## யூனிசெவ் குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளாவர்.

இவர்கள் எதிர்வரும் 12-ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு திரும்புவர்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் போது இவர்கள் சாவகச்சேரி. கோப்பாய், சங்கானை, உடுவில் ஆகிய, இடங்களிலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்கள், பாதிக்கப்பட்ட கிராமங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றைப் பார்வையிடுவர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்வர். இ

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-